# 1. வேளாண் காப்பீட்டுத் திட்டம்

கூட்டுறவு வங்கிகளில் பயிர்க் கடன் பெறும் விவசாயிகளுக்கு ஏற்கனவே காப்பீட்டுத் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. அதைப்போலவே, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பயிர்க் கடன் பெறும் விவசாயிகளுக்கும் காப்பீட்டுத் திட்டம் செயல்முறைப் படுத்தப்பட்டு வருகிறது. எனவே, இந்த இருவகை வங்கிகளின் மூலமாக காப்பீட்டுத் திட்டத்தின் பலனைப் பெற்றிட முடியாமல் இருக்கும் விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் காப்பீட்டுத் திட்டத்தின் பலன் கிடைத்திட வேண்டுமென்ற நோக்கத்தோடு அவர்களுக்கென தனியே காப்பீட்டுத் திட்டமொன்றை தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடைமுறைப்

படுத்த இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இந்த திட்டத்தின் முதல் கட்டமாக ஐந்து லட்சம் விவசாயிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும் காப்பீட்டுத் திட்டம் இந்த 2006–2007ஆம் நிதியாண்டில் நடைமுறைப் படுத்தப்படும். காப்பீட்டு திட்டத்தின் கீழ் 50 சதவீதம் காப்பீடு மான்யமாக விவசாயிகளுக்கும் குத்தகைராதர்களுக்கும் ரூ.8 கோடி வழங்க தமிழக முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## 2. வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் துவங்குதல்

தற்போது வேளாண்மை பெருமக்களின் தேவைகளை உடனுக்குடன் கவனிக்க 28 மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகங்களும், 206 வட்டங்களில் தற்போது 160 வட்டங்களில் மட்டுமே வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. புதியதாக உருவாக்கப்பட்ட வட்டங்களில் உதவி வேளாண்மை இயக்குநர் அலவலகங்கள் தொடங்கப்படவில்லை.

தற்பொழுது 46 வட்டங்களில் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்கள் இல்லாததால், முதல் கட்டமாக

2006–2007ஆம் நிதியாண்டில் 10 வட்டங்களில் புதிய வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்கள் திறக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள அனுமதி வழங்கி உள்ளார்கள் என்பதை இங்குநான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## 3.விவசாயிகளுக்கு மண்வள அட்டை வழங்குதல்

விவசாயிகள் தங்களது சாகுபடி நிலைத்தின் பௌதீக தன்மை, உயிரியியல் தன்மை மற்றும் இரசாயன குணங்களைத் தெரிந்து கொள்வதன் மூலமும், உரங்களை தேவைப்படும் அளவிற்கு மட்டுமே இட்டு, மண்வளத்திற்கேற்ற பயிர்களை விளைவித்து, குறைந்த செலவில் அதிக வருமானம் பெற முடியும். இதற்கு ஒவ்வொரு விவசாயிக்கும் அவர்களுடைய மண்ணை பரிசோதனை செய்து மண்வள அட்டை வழங்குவது அவசியமாகிறது. தமிழ்நாட்டில் உள்ள 80 இலட்சம் விவசாயக் குடும்பங்களில் இதுவரை 2.76 லட்சம் குடும்பங்களுக்கு மட்டுமே மண்வள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 77.24 இலட்சம்

விவசாயக் குடும்பங்களுக்கும் மண்வள அட்டையை வழங்கிட அரசு முடிவெடுத்துள்ளது.

அதற்காக மாநில அரசில் இருந்து இந்த ஆண்டு ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, மண்வள அட்டை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. 2006–2007 வேர்வாடல் நோயினால் பாதிக்கப்பட்டு வெட்டி அகற்றிய தென்னைமரங்களுக்கு ஈட்டுத்தொகை

தமிழகத்தில், 3,75,055 எக்டேர் பரப்பளவில் 8 கோடியே 36 லட்சத்து 30 ஆயிரம் தென்னை மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. அவைகளில் சுமார் ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 885 மரங்கள் வேர்வாடல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதால் இம்மரங்களை வெட்டி அகற்ற வேண்டுமென தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் பரிந்துரை செய்துள்ளது. எனவே, இம்மரங்களை வெட்டி அகற்றுவதற்காக ஒரு மரத்திற்கு ரூ.250/– வீதம் ரூ.317.21 இலட்சம் செலவில் நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் தென்னை வளர்ச்சி வாரிய 100 சத நிதி

உதவியுடன் செயல்படுத்தப்படும் என்பதை இங்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அவ்வாறு வெட்டி அகற்றப்படும் 1 லட்சத்து 26 ஆயிரத்து 885 மரங்களுக்கு பதில் புதிய கன்றுகளை நட்டால், அவை காய்ப்பதற்கு சுமார் 3 முதல் 5 ஆண்டுகள் ஆகும். இதனை ஈடு செய்யும் பொருட்டு ஒரு தென்னை மரத்துக்கு ரூ.1050/—ஐ 2006—2007ஆம் ஆண்டு முதல் 3 ஆண்டுகளுக்கு ஈட்டுதொகையாக வழங்க திட்டம் தயாரிக்கப்பட்டு ரூ.13.33 கோடியை தென்னை வளர்ச்சி வாரியத்திடம் அனுமதி பெற்று வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இங்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## 5. செம்பான் சிலந்தி பூச்சி மேலாண்மை

தமிழகத்தில் தென்னை மரங்களில் செம்பான் சிலந்தி (ஈரியோபைட்) தாக்குதல் அதிக அளவில் உள்ளதால் மகசூல் மற்றும் தேங்காயின் தரம் குறைந்துள்ளது. மாநிலத்தில் உள்ள **695** இலட்சம் காய்க்கும் மரங்களில் **223.53** இலட்சம் மரங்களில் இப்பூச்சியின் தாக்குதல் உள்ளது. இப்பூச்சியைக் கட்டுப்படுத்த தாவர பூச்சிக் கொல்லி மருந்தினை மூன்று முறை வேர் மூலமாக அல்லது மரத்தின் உச்சியில் தெளிக்க தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் பரிந்துரை செய்துள்ளது.

**2004–2005** ஆம் ஆண்டில் தென்னை வளர்ச்சி வாரியத்தின் ரூ.**9.50** கோடி நிதியுதவியுடன் **141.43**

இலட்சம் தென்னை மரங்களில் தாவர பூச்சிக் கொல்லி தெளிக்கப்பட்டது. இதனால் இப்பூச்சியின் தாக்கம் குறைந்த அளவே கட்டுப்படுத்தப்பட்டது. மேலும், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் மேற்கொண்ட ஆய்வில் மீண்டும் அனைத்து பாதிக்கப்பட்ட மரங்களிலும் இப்பரிந்துரையை மேற்கொள்ளுமாறு சிபாரிசு செய்துள்ளது. இப்பரிந்துரைப்படி 223.53 இலட்சம் தென்னை மரங்களில் இப்பூச்சியைக் கட்டுப்படுத்த ரூ.53.65 கோடி செலவாகும். இதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு பரிட்சார்த்தமாக சில மாவட்டங்களில் அமல் படுத்த, தென்னை வளர்ச்சி வாரியத்திற்கு அனுப்பி குறைந்தபட்ச 50 சத நிதி உதவி பெற்று 2006–2007ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## 6. விவசாய மேம்பாட்டுக் குழு
(Agricultural Development Council)

தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ளபடி, மாநில அளவில் விவசாய கடன் உட்பட வேளாண்மையில் உள்ள பல பிரச்சினைகளை அவ்வப்போது ஆய்வு செய்து உடனடி நிவாரண நடவடிக்கைகளை அரசுக்கு பரிந்துரை செய்யவும், விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருளுக்கு உரிய நியாயவிலை கிடைக்க விலை நிர்ணயம் செய்வதற்கும் விவசாய மேம்பாட்டுக் குழு 2006–2007ஆம் ஆண்டிலேயே அமைக்கப்படும். இந்த குழுவில் துறைத் தலைவர்கள், விவசாயிகள், விஞ்ஞானிகள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் வேளாண்மை, தோட்டக்கலை, மீன் வளம், கால்நடை, பால் உற்பத்தி, கோழிவளர்ப்பு ஆகிய பிரிவுகளின்

பிரதிநிதிகள் உறுப்பினர்களாக சேர்க்கப் படுவர்கள் என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## 7. பயோ டீசல்

டீசலுக்கு மாற்றாக 20 விழுக்காடு பயோ டீசல் கலந்து உபயோகிக்கும் வாகனங்களில் இருந்து வரும் புகையால், சுற்றுச் சூழல் பாதிக்கப்படாது. பயோ டீசல் காட்டாமணக்கு விதைகளில் இருந்து தயாரிக்கப் படுகிறது. இந்த காட்டாமணக்கு சாகுபடி விவசாயிகளுக்கு பொருளாதார ரீதியாக நல்ல பலன் தருவதுடன், நாட்டிற்கு அன்னிய செலாவணியை குறைக்கும்.

இத்திட்டத்தின் கீழ் தமிழக விவசாயிகளுக்கு 2006–2007ஆம் ஆண்டில் 20 ஆயிரம் எக்டேர் வீதம் 5 வருடத்திற்கு ஒரு லட்சம் எக்டேர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யவும், கன்றுகள் மான்ய விலையில் வழங்கவும்,

சொட்டு நீர் பாசன கருவிகள் 50 சத மானிய விலையில் வழங்கவும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் விதைகளின் விலையை ஒப்பந்த பண்ணைய அடிப்படையில் நிர்ணயம் செய்யவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## 8. மண்டல தேசிய தோட்டக்கலை வாரியம் அமைத்தல்

இந்தியாவில் சாகுபடி செய்யப்படும் 162.70 லட்சம் எக்டர் தோட்டக்கலைப் பயிர்களில் 56.51 லட்சம் எக்டர் பரப்பளவு தென்னிந்தியாவில் உள்ளது.

தோட்டக்கலைப் பயிர்களுக்கான திட்டப் பிரேரணைகள் அரியானா மாநிலத்தில், உள்ள குர்கானில் செயல்படும் தேசிய தோட்டக்கலை வாரியத்திற்கு தென்னிந்தியாவில் இருந்து மூலதன மானியம் கேட்டு அனுப்பப்படும் மனுக்கள் காலதாமதம் ஏற்படுவதுடன் திட்டத்தின் பயன்பாடுகள் நமது விவசாயிகளுக்கு உடன் கிடைக்க இயலாத நிலை உள்ளது.

சென்னையில் ஏற்றுமதிக்கு தேவையான விமான போக்குவரத்து, துறைமுக வசதி உள்ளதால், தென்னிந்திய அளவிலான தோட்டக்கலை பயிர்களின் வளர்ச்சிக்காக **மண்டல தேசிய தோட்டக்கலை வாரியம் ஒன்றை சென்னையில் 2006–2007ஆம் நிதி ஆண்டில் அமைக்க, மைய அரசுக்கு கருத்துரு அனுப்பி அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இங்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

## 9. முன்னோடி விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வழங்குதல்.

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒன்று அல்லது இரண்டு முன்னோடி விவசாயிகள் தேர்வு செய்து பிறமாநிலங்களில் கடைபிடிக்கும் நவீன தொழில் நுட்பங்களில் பயிற்சியும் மற்றும் இஸ்ரேல், சீனா மற்றும் ஐரோப்பா போன்ற வெளி நாடுகளுக்கும் அழைத்துச் சென்று உயர் தொழில்நுட்ப முறைகளான ஒருங்கிணைந்த உரமேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை, இயற்கைப் பண்ணையம் மற்றும் பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் வளர்த்தல், சொட்டு நீர்ப்பாசனம், உணவு பதப்படுத்துதல்,

மதிப்பூட்டுதல், சொட்டு நீர் மூலம் உரமிடுதல் போன்ற பயிற்சிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பயிற்சி பெற்ற முன்னோடி விவசாயிகள் தாங்கள் அறிந்த தொழில் நுட்பங்களை இதர விவசாயிகளுக்கு தெரிவித்து வேளாண் உற்பத்தியை தமிழகத்தில் பெருக்க, **தேசிய தோட்டக்கலை இயக்க நிதியிலிருந்து 2006–2007 ஆம் நிதி ஆண்டில் ரூ.25 இலட்சம் செலவில் முன்னோடி விவசாயிகளுக்கான பயிற்சி அளிக்கப்படும் என்பதை இங்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.**

## 10. கன்னியாகுமரி மாவட்டத்தில் மலரியல் ஆராய்சி நிலையம் அமைத்தல்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், மல்லி, ஜாதிமல்லி, சம்பங்கி, கனகாம்பரம், அரளி போன்ற மலர்கள் 281 எக்டரில் (700 ஏக்கர்) பயிர் செய்யப்படுகிறது. தோவாளையில் தற்போது பூ ஏல மார்கெட் தினமும் நடைபெற்று வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் அல்லாமல் அருகில் உள்ள மாவட்டமான திருநெல்வேலி, தூாத்துக்குடி மாவட்டங்களில் உள்ள மலர் சாகுபடி செய்யும் விவசாயிகளும் தோவாளை தினசரி பூ ஏல மார்கெட்டுக்கு வந்து வியாபாரம் செய்கிறார்கள். இங்கிருந்து திருவனந்தபுரத்திற்கு வேன் மூலம் எடுத்து சென்று விமானம் மூலம்

உள்நாட்டிற்கும் வெளிநாட்டிற்கும் பூக்கள் அனுப்பப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு பூக்கள் உற்பத்தியை பெருக்க ஒரு மலரியியல் ஆராய்ச்சி நிலையம் தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் ரூ.342 லட்சம் செலவில் 2006–07ஆம் ஆண்டில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இங்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## 11. பட்டுக்கோட்டை தென்னை வணிக வளாகம்

தமிழக தென்னை உற்பத்தியில் 40 சதம் பரப்பளவு ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் உள்ளது.

தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட தென்னை விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் தேங்காய்க்கு நியாயமான நல்ல விலை கிடைத்திடும் வகையில் தஞ்சாவூர்மாவட்டம், பட்டுக்கோட்டை பகுதியில் தென்னைக்கென ஒரு வணிக வளாகம் ரூ.400.00 இலட்சம் (ரூ.4 கோடி) செலவில் மாநில மற்றும் மத்திய அரசு தனியார் பங்கேர்ப்பு நிதியுதவியுடன், 2006–07ஆம் நிதியாண்டிலேயே தொடங்க முடிவு

செய்து இருக்கிறது என்பதை இங்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## 12.ஒசூரில் தக்காளிக்கென குளிர்பதன கிட்டங்கி

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் தக்காளி பயிரிடும் விவசாயிகளின் நலனுக்கென குளிர்பதன கிட்டங்கி வசதியுடன் கூடிய வணிக வளாகம் மத்திய, மாநில அரசுகளின் உதவியுடன் மற்றும் தனியார் பங்கேற்புடன் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது என்பதை இங்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## 13. திராட்சைக்கு குளிர்பதன கிட்டங்கி

தேனி மாவட்டம் ஓடைப்பட்டியில் திராட்சையை தரம் பிரித்து பக்குவப்படுத்தி அட்டைப் பெட்டிகளில் அடைத்து ஏற்றுமதி செய்யும் வகையில் ரூ.3.75 கோடி செலவில் குளிர்பதன கிட்டங்கியுடன் அமைக்க 2006–2007ஆம் நிதி ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 14. முந்திரி ஏற்றுமதி மண்டலம், கடலூர்

தரிசு நிலங்களில் முந்திரி சாகுபடியை ஊக்குவித்து அதிக விளைச்சல் தரும் முந்திரி வகைகளை அதிகப்படுத்தி ஏற்றுமதியை அதிகரிக்க கடலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் பயனடைய கடலூரில் முந்திரி ஏற்றுமதி மண்டலம் ரூ.10.36 கோடி மதிப்பீட்டில் 2006–2007ஆம் நிதி ஆண்டில் அமைக்கப்பட உள்ளது. இதில் மாநில அரசின் பங்கு ரூ.150 லட்சம் என்பதை இங்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## 15. மாங்கனி வணிக வளாகம்

கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் மாங்கனிக்கென ரூ.2 கோடி செலவில் ஒரு வணிக வளாகம் 2006–2007ஆம் நிதி ஆண்டில் அமைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 16. வெங்காயத்திற்கென வணிக வளாகம்

சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் கோயம்புத்தூர் மாவட்டம் பல்லடத்தில் ரூ.2 கோடி செலவில் வெங்காயத்திற்கென ஒரு வணிக வளாகம் அமைக்கப்படும் என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## 17. மருத்துவர் மற்றும் மருத்துவ உதவியாளர்களுக்கு ஊதிய உயர்வு

வேளாண் விற்பனைக் கூடங்களில் இயங்கி வரும் இலவச மருத்துவ மனையில் பணியாற்றிவரும் பகுதி நேர மருத்துவர்களுக்கு தொகுப்பூதியம் ரூபாய் **3500**லிருந்து ரூபாய் **4500**ஆகவும் மருத்துவ உதவியாளருக்கு ரூபாய் **1250**லிருந்து ரூபாய் **1750**ஆகவும் உயர்த்தி வழங்க அரசு தீர்மானித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 18. பெரம்பலூர் மாவட்டத்தில் புதிதாக பருத்தி ஆராய்ச்சி நிலையம் தொடங்குதல்.

தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாலைகளுக்கு தேவைப்படும் பருத்தி ஆண்டொன்றுக்கு 20 இலட்சம் பேல்கள் ஆகும். ஆனால் சராசரி பருத்தி உற்பத்தி 5 இலட்சம் பேல்களாக உள்ளது. ஆராய்ச்சியின் மூலம் மிக நீண்ட இழை பருத்தி இரகங்களை உருவாக்கி தமிழ்நாட்டின் பருத்தி தேவையை பூர்த்தி செய்வதுடன் அகில இந்திய அளவிலும் மிக நீண்ட இழை பருத்தி உற்பத்தியில் தமிழ்நாடு முன்னணி பெறும் வாய்ப்புள்ளது.

இதற்காக **பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் புதியதாக ஆராய்ச்சி நிலையம் 25 எக்டேர் நிலப்பரப்பில் ரூ.75**

இலட்சம் செலவில் 2006–07ம் ஆண்டில் தொடங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## 19. திண்டுக்கல் மாவட்டத்தில் புதிதாக மக்காச்சோள ஆராய்ச்சி நிலையம் நிறுவுதல்

மக்காச்சோளம் உணவாக பயன் படுவதோடு கால்நடை மற்றும் கோழி தீவனத்திற்கும் அதே போல மற்ற தொழிற்சாலைகளின் மூலப் பொருளாகவும் பயன்படுகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் மக்காச்சோளம் அதிக பரப்பளவில் பயிரிடப்படுகிறது.

விவசாயிகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் பயனளிக்கும் வகையில் தரமான வீரிய ஒட்டு ரகங்களை கண்டுபிடித்து விதைகளை குறைந்த விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கவும், விவசாயிகளே விதைகளை உற்பத்தி செய்ய பயிற்சியும், உதவியும் அளிக்க **திண்டுக்கல் மாவட்டத்தில் மக்காச்சோள**

ஆராய்ச்சி நிலையம் ரூ.75 லட்சம் நிதி செலவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மூலம் 2006–2007ஆம் நிதியாண்டில் தொடங்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## 20. தமிழக தென் மாவட்டங்களில் வேளாண்மை பட்டய படிப்பு தொடங்குதல்

தமிழக தென் மாவட்டங்களின் பெரும் பகுதி மானாவாரி நிலங்களாக உள்ளன. இங்குள்ள வேளாண் பெருங்குடி மக்களின் குழந்தைகள் பள்ளிக் கல்வியை முடித்தவுடன் வேளாண்மை குறித்த உயர் கல்வியை பயில அப்பகுதியில் வாய்ப்பு இல்லாததாலும், வேறு மாவட்டங்களுக்கு சென்று பயில வசதி இல்லாத நிலையில் உள்ளனர். இதனை அறிந்த நமது முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தேர்தலின்போது 5 தென் மாவட்டங்களில் வேளாண்மைப் பட்டய படிப்பு தொடங்கப்படும் என அறிவித்தார். 2006–07ஆம் ஆண்டு இரண்டு மாவட்டங்களில் மட்டும் பட்டயப் படிப்புகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மூலம் தொடங்கப்படும். இத் திட்டம் தொடர்ந்து

செயல்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## 21. தொகுப்பு ஊதிய ஆசிரியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கப்படும்

முந்தைய அ.தி.மு.க ஆட்சியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 133 உதவி ஆசிரியர்கள் மாதம் ரூபாய் 8,000/– தொகுப்பு ஊதியமாக வழங்கி பணி நியமனம் செய்யப்பட்டார்கள். அவர்கள் அனைவரும், முதுகலைப் பட்டப்படிப்புடன் முனைவர் பட்டமும் பெற்றவர்களாக உள்ளார்கள்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் தொகுப்பு ஊதியம் பெறும் 133 உதவி ஆசிரியர்களுக்கும் (8000–275–13000) காலமுறை ஊதியம் 1.6.2006 முதல் வழங்கப்படும் என்பதை இங்கு நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## 22. தமிழகத்தில் தேசிய உயிரியத் தொழில்நுட்பவியல் நிறுவனம் (National Institute of Bio-Technology)

மனித வள மேம்பாடு மற்றும் பயிற்சி ஆகியவை வேளாண் தொழில்களில் விவசாயிகள் உள்பட அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைவது இன்றியமையாத ஒன்றாகும்.

மாற்று மரபுகளை வெளிப்படுத்தும் திறன் உள்ள உழவியல் முக்கியத்துவம் பெற்ற மரபணுக்களை பிரித்தெடுத்தல், அழிந்து வரும் தாவர இனங்களைப் பெருக்கி பாதுகாத்தல், ஊட்ட மருந்துகள் மற்றும் நோய் தடுப்பு மருந்துகள் உருவாக்கம் ஆகிய பிரிவுகள் பற்றி ஆய்வுகளை செய்யவும் தமிழ்நாட்டில், மைய அரசின் ரூ.57.60 கோடி நிதியுதவியுடன் ஒரு **தேசிய உயிரிய தொழில் நுட்பவியல் நிறுவனம்** 2006–2007ஆம்

ஆண்டில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## 23. தமிழகத்தில் தேசிய தாவர உயிரியல் நிறுவனம்
## (National Institute of Plant Biology)

பெருகி வரும் மக்கள் தொகை மற்றும் பருவ நிலை மாறுபாடுகளுக்கேற்ப தாவரங்களின் உயிரின மற்றும் மரபின வேறுபாடுகளை, சூழ்நிலைக்கு ஒத்து போகக்கூடிய பண்புகளைப் புரிந்து கொள்வது அவசியமாகிறது. **அழிந்து வரும் அரிய தாவர இனங்களைப் பாதுகாக்கவும், அரிய தாவர இனங்களைப் பதிவு செய்து அதன் மூலம் உணவு உற்பத்தி அதிகரிக்கவும் அகில இந்திய அளவில் ஒரு தேசிய தாவர உயிரியல் நிறுவனம் தோற்றுவிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.** தமிழகத்தில் இவ்வகை தேசிய நிறுவனம் அமைக்க நல்ல சூழல்

அமைந்துள்ளது. இந்நிறுவனத்திற்கான நிதித் தேவையான ரூ.45.15 கோடியை மத்திய அரசிடமிருந்து பெற்று, தமிழகத்தில் தேசிய தாவர உயிரியல் நிறுவனம் 2006–07ஆம் நிதி ஆண்டிலேயே தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனப்தை இங்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## 24. பள்ளிகளில் வேளாண்மைக் கல்வி

வேளாண்மை பாடதிட்டத்தை பள்ளியில் சேர்க்க வேண்டுமென 1999–2000ஆம் நிதி ஆண்டில் ஆணையிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1999–2000ம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட இப் பாடத்திட்டம் 200 பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதில் 100 பள்ளிகளில் வேளாண் பட்டதாரிகள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். கடந்த ஆட்சியில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தாமல் விடுபட்டடுள்ளது. மீண்டும் இப்பாடத் திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தி அனைத்து பள்ளிகளிலும் செயல்படுத்தப்படும். இத்திட்டம் வரும் கல்வி ஆண்டில் கூடுதலாக 100 பள்ளிகளில் செயல்படுத்தப்படுவதோடு தொடர்ந்து ஐந்து ஆண்டுகளில் அனைத்து

பள்ளிகளிலும் வேளாண்மையை ஒரு பாடமாக கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## 25. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் புதிய பட்டபடிப்பு மற்றும் பட்டயப்படிப்புகள் தொடங்குதல்.

தமிழகத்தில் உயரி தொழில் நுட்பம், கணினி அறிவியல் மற்றும் தகவல் தொழில் நுட்ப புரட்சியின் தாக்கம் அதிக அளவில் உள்ள நிலையில் நமது பாடத் திட்டங்களையும் மாற்றி புதிய பாடத் திட்டங்களை அமைப்பது அவசியம் ஆகிறது. இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்
2006–2007ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்புகள் தொடங்கப்பட உள்ளது.

1. பி. டெக். (உயிர் தகவலியல்) 4 ஆண்டு பட்டப்படிப்பு, 40 மாணவர்கள்
2. முதுநிலைப் பட்டயப் படிப்பு (மூலதனம் மற்றும் வணிக பொருள் சந்தைகள்) 25 மாணவர்கள்

3. முதுநிலைப் பட்டயப் படிப்பு (அங்கக வேளாண்மை)

25 மாணவர்கள்

ஒரு பட்டப்படிப்புக்கும், இரண்டு பட்டயப் படிப்புக்கும் ஆகும் செலவினத்தை சுயநிதிக் கல்வி திட்டத்தின் மூலம் பெறப்படும் தொகையிலிருந்தே செலவு செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## 26. தமிழகத்தில் புதிய சர்க்கரை ஆலைகள்

2006–2007 ஆம் ஆண்டில் புதிய சர்க்கரை ஆலைகள் கோ–ஜெனரேசன், எத்தனால் உடன் சேர்த்து அமைக்க ஆத்தூர், சங்கராபுரம், திருக்கோவிலூர், அரியலூர், ஈரோடு, அம்பாசமுத்திரம், கும்மிடிப்பூண்டி, பட்டுக்கோட்டை, மொடக்குறிச்சி ஆகிய பகுதிகளிலிருந்து அரசுக்கு அனுமதி கேட்டு விண்ணப்பங்கள் தனியார்களிடமிருந்து வந்துள்ளன.

இதனை தமிழக அரசு பரிசீலித்து புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, சொட்டு நீர் பாசன முறை செயல்படுத்தி நீர் மேலாண்மை, உயிரியியல் ஆய்வு மையம், திசு வளர்ப்பு மையம் மற்றும் புதிய கரும்பு ரகங்கள் சாகுபடி செய்தல்

போன்ற புதிய தொழில்நுட்பங்களை அவர்களது ஆலைப்பரப்பில் செயல்படுத்த வேண்டுமென்ற நிபந்தனையோடு, 2006–2007ஆம் ஆண்டில் புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க சாத்திய கூறுகள் உள்ள பகுதிகளில் புதியதாக சர்க்கரை ஆலைகள் தொடங்க அனுமதி வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## 27. கரும்பு உற்பத்தியில் சொட்டு நீர் பாசனம்

கரும்பு உற்பத்தித் திறனில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. சொட்டு நீர் பாசனம் மூலம் 40 சதவீதம் பாசன நீர் சேமிக்கப்படுகிறது. ஆகையால், விவசாயிகள் பயன்பெறும் வகையில், சொட்டு நீர் பாசனத்தை விவசாயிகள் மத்தியில் ஊக்குவிக்கும் வகையிலும் 2006–07ஆம் ஆண்டில் 15,000 எக்டர் பரப்பில் ரூ.84 கோடி திட்ட செலவில் சொட்டு நீர் பாசன வயல்கள் அமைக்கப்பட உள்ளது. ஒரு எக்டர் சொட்டு நீர் பாசன வயல் அமைக்க ரூ.56,000/– செலவாகும். இச்செலவில் 50 சதவீத மான்யமாக ரூ.28,000/–க்கு மிகாமல் அரசு ஏற்றுக் கொள்ளும். மேலும், அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் 8.5 எக்டரில் மாதிரி வயல்களை ஆலைக்கரும்பு பண்ணைகளில் அமைத்து கரும்பு விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும்

என்பதையும் இங்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## 28. மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் பொதுத்துறை பாண்டியராஜபுரம் மதுரா சர்க்கரை ஆலைகளை மீண்டும் துவங்குதல்

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை விரிவாக்கம் செய்ததாலும் நவீனப் படுத்தியதாலும் தொடர்ந்து நட்டம் ஏற்ப்பட்டதால் 2001–2002ஆம் ஆண்டு அரவை பருவத்தில் மூடப்பட்டது.

பொதுத்துறை பாண்டியராஜபுரம் மதுரா சர்க்கரை ஆலை போதிய கரும்பு இல்லாதன் காரணமாக 2002–2003ஆம் ஆண்டு அரவை பருவத்தில் மூடப்பட்டது.

தற்பொழுது அப்பகுதி கரும்பு விவசாயிகள், மீண்டும் இவ்வாலைகளை துவக்கி, தொடர்ந்து அரவை செய்ய வேண்டி அரசிடம் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

எனவே, விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று மீண்டும் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் பொதுத்துறை பாண்டியராஜபுரம் மதுரா சார்க்கரை ஆலை தொடங்குவது குறித்து அரசால்

பரிசீலிக்கப்படும் என்பதை இங்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.